# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

வழக்கு எண்.25261/விசாரணை/ 2009,

விசாரணை நாள் = 29–1–2010 (இராமநாதபுரம்)

| | | |
|---|---|---|
| முன்னிலை_ | = | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,<br>எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | = | திருமதி கே. ராஜேஸ்வரி<br>த/பெ கே.எம். கிருஷ்ணன்<br>சொருக்குளிப்பட்டி, தெற்கு ஆமூர் கிளை அஞ்சல்<br>மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்–625 110 |
| பொது அதிகார அமைப்பு | = | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டாட்சியர் அலுவலகம், மதுரை வடக்கு,. மதுரை<br>======== |

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திருமதி கே. ராஜேஸ்வரி வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்ட தேர்தல் துணை வட்டாட்சியர் திரு ஜி. சமுத்திரபாண்டி வந்திருந்தார்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் 29.4.2009 அன்று வட்டாட்சியர், வடக்கு வட்ட அலுவலகம், மதுரை என்று முகவரியிட்டு, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், மாங்குளம் கிராமம் நஞ்சை நிலங்கள் பிட் 1 , 2 ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் எவை எவை தற்போது இரு போக விளைச்சல் மற்றும் ஒரு போக விளைச்சல் பாசன வசதி கொண்ட நஞ்சை நிலங்கள் என்பது குறித்த தகவலை சான்றொப்பமிட்டு வழங்க வேண்டி விண்ணப்பித்திருந்தார். சட்டப் பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப் பெறாததால், சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் மனுதாரர் 20.7.2009 அன்று மாவட்ட ஆட்சியருக்கு முதல் மேல்முறையீடு செய்துள்ளார். மனுதாரருக்கு 10.8.2009 அன்று தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. தகவல்கள் முழுமையாக இல்லையென்று தெரிவித்து, மனுதாரர், 6.10.2009 அன்று சட்டப் பிரிவு 19(3)ன் கீழ் இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் வரவில்லை. விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை 10.8.2009 அன்று வழங்கியதாகத் தெரிவித்து, மேலும் சில தகவல்கள் 27.1.2010 அன்று மனுதாரருக்கு அளிக்கப்பட்டதாகத் தெரிவித்து அதன் நகல்களையும் இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். மனுதாரருக்கு அளிக்கப்பட்டதற்கான ஆவணம் எதுவும் இல்லாத நிலையில், இன்றையதினம் மனுதாரருக்கு அத்தகவல்களை ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் உடனடியாக அனுப்பி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.25261/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**வட்டாட்சியர் அலுவலகம், மதுரை வடக்கு, மதுரை**

**பெறுநர்**
**திருமதி கே. ராஜேஸ்வரி, த/பெ கே.எம். கிருஷ்ணன்**
**சொருக்குளிப்பட்டி,**
**தெற்கு ஆமூர் கிளை அஞ்சல்,**
**மேலூர் வட்டம்,**
**மதுரை மாவட்டம்–625 110**